
# சரியான மகா மந்திரம்

## (சாஸ்திர நிரூபணம்)




(Gokul Publications, Kanyakumari, India)



| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| *nara* | ***ha*** | *ri-nāma* | *anta* | ***re*** | *acchu* | *bhāvaha* | ***ha*** | *be* | *bhavasāga* | ***re*** | *pāra* |
| *dhara* | ***re*** | *śravaṇe* | *nara* | ***ha*** | *ri-nāma* | *sāda* | ***re*** | *cintāmaṇi* | *u* | ***ha*** | *sāra* |
| *yadi* | ***kṛ*** | *ta-pāpi* | *āda* | ***re*** | *kabhumantraka-* | | ***rā*** | *ja śravaṇe* | *ka* | ***re*** | *pāṇa* |
| *śrīkṛ* | ***ṣṇa*** | *caitanya* | *bale* | ***ha*** | *ya* | *tacchudurga* | ***ma*** | *pāpa tāpa* | *sa* | ***ha*** | *trāṇa* |
| *kara* | ***ha*** | *gaura-guru-vai* | | ***ṣṇa*** | *va* | *āśraya la* | ***ha*** | *nara* | *harinā* | ***ma*** | *hāra* |
| *saṁsā* | ***re*** | *nāma lai* | *su* | ***kṛ*** | *ti* | *haiyā ta* | ***re*** | *āpāmara* | *du* | ***rā*** | *cāra* |
| *ithe* | ***kṛ*** | *ta - viṣaya - tṛ* | | ***ṣṇa*** | *pahuñ-nāma-hā* | | ***rā*** | *yo dhāraṇe* | *śra* | ***ma*** | *bhāra* |
| *kuṭṛ* | ***ṣṇa*** | *jagadānanda* | | ***kṛ*** | *ta-kalmaṣa* | *ku* | ***ma*** | *ti rahala* | *kā* | ***rā*** | *gāra* |

*hare kṛṣṇa hare kṛṣṇa kṛṣṇa kṛṣṇa hare hare*
*hare rāma hare rāma rāma rāma hare hare*

This illustration reveals the *hare kṛṣṇa mahā-mantra* concealed

# சரியான மகா மந்திரம்

**ஸ்ரீ கௌரங்கா ராதா மதன் மோகன் ஆலயம்**
(கொட்டாரம், கன்னியாகுமரி)

ஒன்றாம் பதிப்பு
March 24, 2024, *Version 1.4*
(கௌர பூர்ணிமா வெளியீடு)

**ஒரே இறைவன்!**
**ஜாதியில்லை, நிறமில்லை, மதமில்லை.**

ஒரே மந்திரம்
**ஹரே கிருஷ்ண ஹரே கிருஷ்ண**
**கிருஷ்ண கிருஷ்ண ஹரே ஹரே**
**ஹரே ராம ஹரே ராம**
**ராம ராம ஹரே ஹரே**

Our acknowledgements and appreciations go to all the devotees who helped in making and printing this book.

This book is based on 'Hari Nama Maha Mantra' written by Srila Gurudava - the Yuga Acharya Srimad Bhakti Vedanta Narayana Goswami Maharaja.

Bhagavati Kanti Dasa
(Disciple of Yuga Acharya Srila Narayana Goswami Maharaja)

**Publication:** Gokul Publications
2/5 Gokul Bhavan
Mission Compound
Kottaram - 629703,
Kanyakumari, Tamil Nadu, India

**Contact:** bkdasa@gmail.com

**Printing:** Ajay Krishna Dasa
Radhika Devi Dasi

**Website:** gokulbhajan.com
**Youtube:** youtube.com/c/bkdasa

**Phone:** +91 750 222 2794
+91 960 066 8797
+91 959 796 9492
+1 919 491 9536

# பொருளடக்கம்

1. கலியுகத்தின் குழப்பங்கள்........................................6
   1.1 மனிதர்களின் சுபாவம்..........................................6
   1.2. இறைவனின் வருகையின் ஒரு காரணம்.................8

2. யுக தர்மங்களின் மந்திரங்கள்.....................................10
   2.1. சத்திய யுக மந்திரம்............................................10
   2.2. திரேதா யுக மந்திரம்...........................................11
   2.3. துவாபர யுக மந்திரம்...........................................11
   2.4. கலி யுக மந்திரம்.................................................11

3. தவறான மகா மந்திரம்................................................14

4. சாஸ்திரங்களில் மகா மந்திரம்.....................................20
   4.1 சாஸ்திரம்: பிரம்ம யமலா.......................................20
   4.2 சாஸ்திரம்: ஸ்ரீராதா தந்திரம்...................................22
   4.3 சாஸ்திரம்: பிரம்மாண்ட புராணம்..........................23
   4.4 சாஸ்திரம்: ஆனந்த சம்கிதை................................24
   4.5 சாஸ்திரம்: சனத் குமார சம்கிதம்...........................26
   4.6 சாஸ்திரம்: கலி சந்தரண உபனிஷத்......................27

5. மகா மந்திரம் ஆனந்தம் அளிக்கும்..............................29

6. முடிவான உண்மை......................................................30

# 1. கலியுகத்தின் குழப்பங்கள்

பிரம்ம தேவரின் ஒரு நாளில் வரும் பகலில், சதுர் யுகங்கள் என்று கூறப்படும் நான்கு யுகங்களும் ஆயிரம் முறைகள் வந்து போகின்றன, சத்திய யுகம், திரேதா யுகம், துவாபர யுகம், கலியுகம் என்ற நான்கு யுகங்களிலும், கலியுகம் மிகவும் மோசமானது. கலியுகத்தில் தோன்றும் ஜீவன்கள், குறிப்பாக மனிதர்கள், எப்போதும் குழப்பங்களையும் சச்சரவுகளையும் கொண்ட வாழ்க்கையைத்தான் வாழ்வார்கள்.

## *1.1* மனிதர்களின் சுபாவம்

ஜீவன்கள் அனைத்தும் பகவானிடமிருந்து தோன்றிய சிறு அம்சங்கள் (அணு-சித்). இவ்வாறு தோன்றிய அனைத்து ஜீவன்களில், ஜடலோகங்களை நோக்கி கீழே வரும் ஜீவன்கள் இறைவன் அளித்த, இறைவனுக்கு மட்டுமே சொந்தமான, ஜடலோகங்களை தத்தம் சுயநலத்திற்காக மட்டுமே உபயோகம் செய்து சேதம் (தார்யதே) செய்கின்றனர். இதை நாம் கண்கூடாக எங்கும் காண்கிறோம்.

அபரேயம் இதஸ் த்வன்யாம்
ப்ரக்ருதிம் வித்தி மே பராம்
ஜீவ பூதாம் மகா பாஹோ
யயேதம் தார்யதே ஜகத் ... (கீதை 7.5)

“ஓ அர்ஜுனா! ஜீவன்கள் என்னுடைய விசேஷமான சக்தியிலிருந்து தோன்றியவர்கள். ஆனால் இவை ஜடலோகங்களை தங்கள் ஆதாயத்திற்காக பயன்படுத்தி அவற்றை அழித்து விடுகின்றனர்.”

சதுர் யுகங்களில் முதலாவது வரும் சத்திய யுகம் தூய்மையான ஜீவன்கள் வாழும் யுகம். எனவே சத்திய யுகத்தில் பெரும்பாலும் தன்னலம் கிடையாது. ஆனால் படிப்படியாக வரும் மற்ற யுகங்களில் தன்னலம் அதிகமாகிக் கொண்டே வரும்.

கலியுகத்தில் வரும் ஜீவன்கள் மிகவும் அதிகமான அளவு சுயநலம் உள்ளவர்கள். தங்கள் ஜட இன்பங்களுக்காக, காடுகள், மரங்கள் அத்தனையையும் அழிக்கிறார்கள், நிலத்தடி நீர், நிலத்தடி எண்ணை சுரங்கங்கள், மற்றும் தங்கம், வைர சுரங்கங்கள் அனைத்தையும் அளவுக்கு மீறி உறிஞ்சி ஜடவுலகத்தை தொடர்ந்து அழிக்கிறார்கள். இதையே மேலேயுள்ள சுலோகத்தில் 'தார்யதே' என்று பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் கூறுகிறார்.

கொடூரங்கள் நிறைந்த கலியுகத்தில் மனிதர்களுக்கு சோம்பல், மந்த புத்தி, ஞாபக மறதி, அகங்காரம், ஆன்மீக அறியாமை, பொறாமை, கோபம் என்ற அத்தனை கெட்ட குணங்களும் மலிந்து இருக்கும். தகுதி எதுவும் இல்லாதவர்கள் அரசு நிர்வாகம் செய்வதாக மக்களை ஏமாற்றி, தன் சுய நலனுக்காக எல்லாவற்றையும் சுரண்டுவார்கள். இதை நாம் இப்போதே கண் கூடாகக் காண்கிறோம்.

மேலும், கலியுக மக்களுக்கு ஆன்மீக அறிவு மிகவும் குறைவாக இருப்பதால், சாஸ்திரங்களைக் கூட சரியாக அறியாத நிலையில் இருப்பார்கள். தர்மங்கள் அழிந்து விடும்.

ஏராளமான மனிதர்கள், ஆன்மீக உலக பரிணாமங்களை அறிய இயலாத பலவீனத்தால் சாஸ்திரங்களை Mythology என்று கூறுகிறார்கள். ஆன்மீக பலவீனம் நிறைந்தது இந்த கலியுகம். மகா ரிஷிக்கள் சப்த பிரம்மத்திலிருந்து படைத்த புனிதமான சாஸ்திரங்களையும் கூட அவை ஏதோ சில மனிதர்களின் கற்பனையிலிருந்து உண்டானவை என்று நினைக்கிறார்கள்.

பலர் சாஸ்திரங்களையும் மந்திரங்களையும் கூட தங்கள் அறிவற்ற நிலையினாலும், சொந்த நலன்களுக்காகவும் திருத்தி கலப்படம் செய்து விடுகிறார்கள். ஸ்ரீசைதன்ய மகாபிரபு கூறியது போல், "இந்த கலியுகத்தில் அனைத்து புராணங்களையும் பலரும் திருத்தி கலப்படம் செய்து விட்டனர். எனவே தான் இது வரை எந்த கலப்படமும் இல்லாமல் தப்பிய ஸ்ரீமத் பாகவதம் மட்டும் தான் நமக்குத் தேவை" என்று அவர் நமக்குக் கூறினார்.

## *1.2.* இறைவனின் வருகையின் ஒரு காரணம்

இப்படி மனிதர்கள் சாஸ்திரங்களையும், தர்மங்களையும் திருத்தியும் அழித்தும் கெடுக்கும் போது, பகவான் ஸ்ரீகிருஷ்ணர் அவரது பகீரங்க சக்தியிலிருந்து தோன்றிய ஜட உலகங்களில், அவதாரமாகத் தோன்றி அவற்றைத் திரும்பவும் சரி செய்கிறார்.

யதா யதா ஹி தர்மஸ்ய
கிலானிர் பவதி பாரத
அப்யுத்தானம் அதர்மஸ்ய
ததாத் மானம் ஸ்ருஜாம்யஹம் .. கீதை 4.7

“எப்போது தர்மங்கள் அழிந்து அதர்மங்கள் தலை தூக்குகின்றதோ, அப்போது நானே இந்த உலகத்தில் தோன்றி, சரியான தர்மங்களை மீண்டும் நிலை நாட்டுவேன்" என்று பகவான் ஶ்ரீகிருஷ்ணர் கூறுகிறார்.

# 2. யுக தர்மங்களின் மந்திரங்கள்

ஜட உலகங்களை அனுபவித்து அங்கே நிரந்தரமாக ஆனந்தமுடன் இருக்க வேண்டும் என்ற தவறான எண்ணத்தினால் இறைவனின் தடஸ்த சக்தியிலிருந்து கீழே விழுந்த பத்த ஜீவன்கள் உண்மையில் சம்சார சாகரத்தில் சிக்கிக் கொண்டு பரிதவிக்கின்றன. இவ்வாறு தவிக்கும் ஜீவன்களுக்கு விடுதலை கொடுத்து மேட்சம் அளிப்பதற்காக பகவான் ஸ்ரீகிருஷ்ணர் கருணை கொண்டு ஏராளமான சாஸ்திரங்களையும், குறிப்பாக சக்தி வாய்ந்த மந்திரங்களையும் அளித்துள்ளார். ஆனால் கேவலம், இந்த பத்த ஜீவன்களோ அவர் கொடுத்த சாஸ்திரங்களையும், மற்றும் அவரது புனிதமான மந்திரங்களையும் கூட இந்த கலியுகத்தில் கலப்படம் செய்து விடுகிறார்கள்!

கட்டுண்டு பரிதவிக்கும் சதுர் யுகங்கள் என்று கூறப்படும் நான்கு யுகங்களுக்கும் மோட்சம் பெற தனித்தனி மந்திரங்களும், வழிபாட்டு முறைகளும் விதிக்கப்பட்டன.

## *2.1.* சத்திய யுக மந்திரம்

சத்திய யுகத்தில் மனிதர்கள் தபசுகள் (தவங்கள்) மூலமாக மோட்சம் பெற்றனர். சத்திய யுகத்தில் அவர்களுக்கான மந்திரம்:

நாராயண பரா வேதா, நாராயண பராக்ஷரா

நாராயண பர முக்திஹி, நாராயண பரா கதிஹி

## *2.2.* திரேதா யுக மந்திரம்

திரேதா யுகத்தில் மனிதர்கள் யக்ஞங்கள் (யாகங்கள்) மூலமாக மோட்சம் அடைந்தனர். திரேதா யுகத்தில் அவர்களுக்கான மந்திரம்:

ராம நாராயணாநந்த, முகுந்த மதுசூதன

கிருஷ்ண கேசவ கம்ஸாரே, ஹரே வைகுந்த வாமன

## *2.3.* துவாபர யுக மந்திரம்

துவாபர யுகத்தில் ஆலய வழிபாடுகள் மூலமாக மனிதர்கள் மோட்சம் பெற்றனர். துவாபர யுகத்தில் அவர்களுக்கான மந்திரம்:

ஹரே முராரே மது கைத்தபாரே

கோபால கோவிந்த முகுந்த சௌரே

யக்ஞேஸ நாராயண கிருஷ்ண விஷ்ணோ

நிராஸ்ரயம் மாம் ஜகதீஸ ரக்ஷ

## *2.4.* கலி யுக மந்திரம்

கலி யுகத்தில் மேலே குறிப்பிட்ட எந்தவிதமான வழிபாடுகளும் உபயோகம் ஆகாது. ஹரி நாம ஜெபம், குறிப்பாக மகா மந்திர ஜெபம் மட்டும் தான் மோட்சம் பெற உதவும்.

ஹரேர் நாம ஹரேர் நாம, ஹரேர் நாமைவ கேவலம்

கலௌ நாஸ்தி ஏவ நாஸ்தி ஏவ, நாஸ்தி ஏவ கதிர் அன்யதா

"சண்டை சச்சரவுகள் நிறைந்த கலியுகத்தில், முக்தி பெற, ஹரி நாம ஜெபத்தைத் தவிர வேறு எந்த வழியுமில்லை. வேறு எந்த வழியுமில்லை, வேறு எந்த வழியுமில்லை" என்று பிருஹன் நாரதீய புராணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆனால் இவ்வாறு கலியுகம் மிகவும் மோசமாக இருந்தாலும், இந்த கலியுகத்தில் ஒரு பெரும் பாக்கியமும் உள்ளது. அது தான் மகா மந்திரத்தின் மகிமை.

கலி யுகத்தில் முழு பலன் கொடுக்கும் ஒரே மந்திரம் மகா மந்திரம். ஏனென்றால் கலியுகத்தில் மற்ற அத்தனை மந்திரங்களிலும் கலியின் உக்கிரம் இருக்கும். எனவே அவை பலனளிக்காது. அனைத்து சாஸ்திரங்களும் கூறும் கீழ்க்கண்ட மகா மந்திரம் மட்டுமே கலியுகத்தில் பயனளிக்கும்:

ஹரே கிருஷ்ண ஹரே கிருஷ்ண
கிருஷ்ண கிருஷ்ண ஹரே ஹரே
ஹரே ராம ஹரே ராம
ராம ராம ஹரே ஹரே

ஸ்ரீகிருஷ்ணரின் மந்திரமான இந்த மகா மந்திரம் மட்டுமே கலியுகத்தில் பயனளிக்கும் என்று 'அனந்த சம்கிதா' என்ற நூலிலும் கீழ்க்கண்டவாறு கூறப்பட்டுள்ளது.

சோட சைதானி நாமானி
த்வாத்ரிம்சத் வர்ணகானி ஹி
கலௌ யுகே மஹா மந்த்ர:
சம்மதோ ஜீவ தாரணே

“பதினாறு நாமங்களை முப்பத்தி இரண்டு வார்த்தைகளால் கொண்ட மகா மந்திரத்தால் மட்டுமே கலியுகத்தில் அத்தனை ஜீவன்களுக்கும் மோட்சம் கிடைக்கும்."

## 3. தவறான மகா மந்திரம்

குழப்பங்கள் மலிந்த இந்தக் கலியுகத்தில், தற்சமயம் இன்னொரு குழப்பமும் உண்டாகியுள்ளது. சாஸ்திரங்களில் சரியாகக் குறிப்பிடப்பட்டுள்ள மகா மந்திரத்தையே மாற்றி விட்டார்கள்! இந்த நூலில் நாம் குறிப்பிடும் தெரிந்த அத்தனை சாஸ்திரங்களின் படி, சரியான மகா மந்திரம் இதுவே:

**ஹரே கிருஷ்ண ஹரே கிருஷ்ண**
**கிருஷ்ண கிருஷ்ண ஹரே ஹரே**
**ஹரே ராம ஹரே ராம**
**ராம ராம ஹரே ஹரே**

ஆனால் தற்போது பலரும் மகா மந்திரத்தைத் தவறாக கீழ்வருமாறு ஜெபித்தும் கீர்த்தனமாக பாடவும் செய்கிறார்கள்:

ஹரே ராம ஹரே ராம
ராம ராம ஹரே ஹரே
ஹரே கிருஷ்ண ஹரே கிருஷ்ண
கிருஷ்ண கிருஷ்ண ஹரே ஹரே

ஏன் இப்படி மகா மந்திரத்தைத் தவறாக ஜெபிக்கிறீர்கள் என்று கேட்டால், அவர்கள் கீழ்க்கண்ட பதில்களைக் கூறுகிறார்கள்:

1) வெங்கடேச பதிப்பகம் (Mumbai) பிரசுரித்த கலி சந்தரண உபநிஷத்தில், மகா மந்திரம் "ஹரே ராமா ஹரே ராமா..." என்று தான் ஆரம்பிக்கிறது.

2) இதை ஒட்டி கீதா பிரஸ் (கோரக்பூர்) பிரசுரித்த 'கல்யாண' என்ற நூலிலும், மகா மந்திரம் இவ்வாறு 'ஹரே ராமா ஹரே ராமா...' என்று ஆரம்பிக்கிறது என்று தான் அச்சிட்டிருக்கிறார்கள்.

3) ஸ்ரீசீதாராமர் ஸ்ரீகிருஷ்ணருக்கு முன்னால் திரேதா யுகத்தில் தோன்றினார். ஸ்ரீகிருஷ்ணர் பின்னால் வந்த துவாபர யுகத்தில் தான் தோன்றினார்.

மேல் குறிப்பிட்ட அத்தனையும் தவறு! இதோ விளக்கம்:

முதலாவது பதிலுக்கான விளக்கத்தைப் பார்ப்போம்:

1) இதே வெங்கடேச பதிப்பகம் (Mumbai) பிரசுரித்த முதலாவது வெளியீடான கலி சந்தரண உபநிஷத்தில் மகா மந்திரம் 'ஹரே கிருஷ்ண ஹரே கிருஷ்ண..' என்று தான் ஆரம்பிப்பதாக எழுதப்பட்டுள்ளது. அந்த சரியான கலி சந்தரண உபநிஷத் பதிப்பு பிரதிகளை இன்றும் கூட நாம் கொல்கத்தா மற்றும் ஜெய்ப்பூர் போன்ற இடங்களிலுள்ள நூலகங்களில் காணலாம். ஏன் பிந்திய வெளியீடுகளில் இப்படி மாற்றி விட்டார்கள் என்பது பெரிய புதிர்!

கேவலம், இப்படி இவர்கள் மூல சாஸ்திரங்களையே மாற்றும் போது வேறு என்ன கலப்படம் செய்ய மாட்டார்கள்?

இனி இரண்டாவது பதிலுக்கான விளக்கத்தைப் பார்ப்போம்:

2) கீதா பிரஸ் ஒரு அங்கீகாரம் பெற்ற நிறுவனம் அல்ல. மேலும், இவர்களும் வெங்கடேச பதிப்பகம் தப்பான முறையில் பிரசுரித்த கலி சந்தரண உபநிஷத்தினால் குழம்பிப் போயிருக்கலாம். ஏனென்றால், எந்த சாஸ்திரங்களிலும் மகா மந்திரம் 'ஹரே ராம ஹரே ராம…' என்று தொடங்குவதாக குறிப்பிடப்படவேயில்லை. இந்த நூலில் விளக்கமாக நாம் அத்தனை சாஸ்திரங்களையும் கொடுத்துள்ளோம்.

இனி மூன்றாவது பதிலுக்கான விளக்கத்தைப் பார்ப்போம்:

3) ஶ்ரீகிருஷ்ணருக்கு ஆதியும் இல்லை, அந்தமும் இல்லை. எனவே அவரது மந்திரத்துக்கும் ஆதியுமில்லை அந்தமுமில்லை.

ஈஸ்வர பரம கிருஷ்ணா:
சச்சிதானந்த விக்ரஹ:
அனாதிர் ஆதிர் கோவிந்த:
சர்வ காரண காரணம் .. (பிரம்ம சம்கிதை 5.1)

“பரம புருஷ பகவான் ஶ்ரீகிருஷ்ணரே முழு முதற்கடவுள். அவரது சரீரம் நித்தியமான, அறிவு நிறைந்த ஆனந்தமயமானது. அவர் ஆதியற்றவர். அனைத்து

காரணங்களுக்கும் அவரே காரணமாவார்.”

எவ்வாறு ஸ்ரீகிருஷ்ணருக்கு ஆதியும் அந்தமும் கிடையாதோ, அதே போல் மகா மந்திரத்துக்கும் ஆதியும் இல்லை அந்தமும் இல்லை. மேலும், மந்திரங்களை நாம் ஒருபோதும் திருத்தவோ, தப்பாக உச்சரிப்பதோ கூடாது. அவ்வாறு செய்தால் பலன் கிடைக்காமல் போவது மட்டுமின்றி, அபராதங்களையும் கூட விளைவிக்கலாம். மகா மந்திரம் நிரந்தரமானது, அழியாதது. ஆன்மீக உலகமே அதன் மூலம். இந்த மந்திரம் ஸ்ரீகிருஷ்ணரின் கோலோகத்தில் எப்போதும் ஒலித்துக் கொண்டேயிருக்கிறது!

ஸ்ரீகிருஷ்ணரின் வருகைக்கும், ஸ்ரீராமரின் வருகைக்கும், முதலும் முடிவுமற்ற கிருஷ்ண மந்திரமான மகா மந்திரத்துக்கும் எந்த விதமான சம்பந்தமும் கிடையாது. நான்கு யுகங்களும் மாறி மாறி சுற்றிக் கொண்டே வந்து போய் கொண்டிருக்கும். எனவே ஸ்ரீராமர் தோன்றிய திரேதா யுகத்திற்கு முன்பு வந்த துவாபர யுகத்தில் ஸ்ரீகிருஷ்ணர் தோன்றியிருப்பாரே. எனவே இந்த காரணம் சிறு குழந்தைகள் அறிவில்லாமல் கூறுவதைப் போன்றது. தொடர்ந்து சுற்றும் யுகங்களைப் பற்றி அறிந்தவர்கள் இப்படி ஒரு போதும் பேச மாட்டார்கள்.

இன்னொரு விபரீததைப் பாருங்கள்.. இந்த கிருஷ்ண மந்திரத்தை ஸ்ரீராமர் கோயிலில் நாம் பாடினால் 'ஹரே ராமா' என்று தான் ஆரம்பித்து பாட வேண்டும் என்கிறார்கள்!

மகா மந்திரம் ஶ்ரீகிருஷ்ணர் வசிக்கும் கோலோக பிருந்தாவனத்தைச் சார்ந்தது.

த்வாத்ரிம்ஷத் அக்ஷரம் மந்த்ரம்
நாம ஷோடஸகான்விதம்
ப்ரஜபன் வைஷ்ணவோ நித்யம்
ராதா கிருஷ்ணா ஸ்தலம் லபேத்

“எந்த ஒரு வைஷ்ணவர் ஶ்ரீகிருஷ்ணரின் பதினாறு நாமங்கள் கொண்ட முப்பத்தி இரண்டு வார்த்தைகளுடன் வரும் மகா மந்திரத்தை இடைவிடாமல் ஜெபிக்கிறாரோ, அவர் ஶ்ரீ ஶ்ரீராதா கிருஷ்ணரின் வாசஸ்தலமான கோலோக பிருந்தாவன தாமத்தை நிச்சயமாக அடைவார்.”

இந்த கோலோக பிருந்தாவன தாமம், காலங்களுக்கு அப்பாற்பட்டது. இந்த தாமத்தில் எப்போதும் ஒலித்துக் கொண்டிருக்கும் மகா மந்திரமும் காலங்களுக்கு அப்பாற்பட்டது. எனவே ஶ்ரீராமருக்குப் பின் வந்தவர் ஶ்ரீகிருஷ்ணர் என்று குழம்பி மந்திரத்தையே மாற்றுவது மிகப் பெரிய முட்டாள் தனம்.

இனி நான்காவது பதிலுக்கான விளக்கத்தைப் பார்ப்போம்:

4) மகா மந்திரம் ஶ்ரீராம மந்திரம் அல்ல. அது ஶ்ரீகிருஷ்ண மந்திரம். இதில் வரும் 'ராம' என்ற வார்த்தை ஶ்ரீசீதா ராமரையோ, ஶ்ரீபரசு ராமரையோ, ஶ்ரீபல ராமரையோ குறிக்க வில்லை. அவர்கள் அனைத்தும் 'ராம' என்ற வார்த்தையில் அடங்கி இருந்தாலும், உண்மையில் 'ராம'

என்பது ஸ்ரீராதா ரமணரைக் குறிக்கிறது. 'ரம்' என்ற சமஸ்கிருத வார்த்தையைக் கவனிக்க வேண்டும். மகா மந்திரம் ஸ்ரீகிருஷ்ண மந்திரம். ஸ்ரீராமருக்கு வேறு மந்திரம் உள்ளது. எனவே ஸ்ரீகிருஷ்ண மந்திரத்தையும் ஸ்ரீராம மந்திரத்தையும் பற்றிக் குழப்பம் வேண்டாம்.

பிரம்மத்திற்கும் மேலேயுள்ள ஸ்ரீராமரின் ஆன்மீக உலகம் சாகேத் (அயோத்யா) என்று அழைக்கப்படுகிறது. அதற்கும் மேலான ஸ்ரீகிருஷ்ணரின் ஆன்மீக உலகம் கோலோகம் என்று அழைக்கப்படுகிறது. ஸ்ரீராமரின் லோகமான சாகேத், வைகுண்ட லோகத்தில் உயர்ந்த தாமம் மட்டுமே. ஆனால் பகவான் ஸ்ரீகிருஷ்ணரின் ஆன்மீக லோகமான கோலோகம், அனைத்து ஆன்மீக லோகங்களிலும் மிகவும் உயர்ந்ததாகும். எனவே மந்திரங்களும் வித்தியாசமானவை.

இந்த கலியுகத்தில் சாஸ்திர ஞானம் அழிந்து விட்டது. கலியுகத்தின் தொடக்கமான சந்தி என்ற மிக ஆரம்ப காலத்திலேயே இப்படிக் குழப்பங்கள் உண்டானால், இந்தக் கலியுகத்தின் பின்னால் வரும் காலம் எப்படி கொடூரமாயிருக்கும் என்பதை நினைத்துப் பார்க்கவே பயமாக உள்ளது.

ஆனால் உண்மையில், நாம் அத்தனை மூல சாஸ்திரங்களையும் ஆராய்ந்தால் இந்த குழப்பத்திற்கு ஆணித்தரமான பதில் கிடைக்கிறது. அடுத்த அத்தியாயத்தை தயவு செய்து மிகவும் கவனமாகப் படியுங்கள்.

# 4. சாஸ்திரங்களில் மகா மந்திரம்

## *4.1* சாஸ்திரம்*:* பிரம்ம யமலா

பிரம்ம யமலா என்ற ஆதி சாஸ்திரத்தில் மகா மந்திரத்தைப் பற்றிக் கீழ்வருமாறு காண்கிறோம். இதில் சிவபெருமான் மகா மந்திரத்தை எவ்வாறு உச்சரிக்க வேண்டும் என்பதை பார்வதி தேவிக்குக் கூறுகிறார்:

சர்வத்ர முச்யதே லோகோ
மஹா பாபாத் கலௌ யுகே
ஹரே கிருஷ்ண பத த்வந்த்வம் ('ஹரே கிருஷ்ண' - இரண்டு தடவை)
கிருஷ்ணேதி ச பத த்வயம் ('கிருஷ்ண' - இரண்டு தடவை)

ததா ஹரே பத த்வந்த்வம் ('ஹரே' - இரண்டு தடவை)
ஹரே ராம இதி த்வயம் ('ஹரே ராம' - இரண்டு தடவை)
தத் அந்தே ச மஹா தேவி
ராம ராம த்வயம் வதேத் ('ராம ராம' - இரண்டு தடவை)

ஹரே ஹரே ததோ ப்ரூயாத் ('ஹரே' - இரண்டு தடவை)
ஹரிநாம சமுத்தரேத்
மஹா மந்த்ரம் ச 'க்ருஷ்ணஸ்ய'
சர்வ பாப ப்ரணாஸகம் இதி

“ஓ மகா தேவீ.. இதோ பார்.. கலியுகத்தில், ஸ்ரீ ஹரியின் நாமங்களைத்தவிர வேறு எதனாலும் பாவங்களை அழிக்க இயலாது. எனவே ஜீவன்கள் மோட்சம் அடைய வேண்டுமானால் இந்த மகா மந்திரத்தை எப்படி ஜெபிக்க வேண்டும்? என்பதை கூறுகிறேன் கேள். முதலில் 'ஹரே கிருஷ்ண' என்ற வார்த்தையை இரண்டு தடவை ஜெபிக்க வேண்டும். அதன் பின், ‘கிருஷ்ண' என்று இரண்டு தடவை ஜெபிக்க வேண்டும். அதன் பின்னர் 'ஹரே' என்று இரண்டு தடவை ஜெபிக்க வேண்டும். அதன் பின்னர், ‘ஹரே ராம' என்ற வார்த்தையை இரண்டு தடவை ஜெபிக்க வேண்டும். அதன் பின் 'ராம' என்ற வார்த்தையை இரண்டு தடவை ஜெபிக்க வேண்டும். அதன் பின்னர் 'ஹரே' என்று இரண்டு தடவை ஜெபிக்க வேண்டும்.

ஸ்ரீகிருஷ்ணருடைய இந்த மகா மந்திரத்தை சங்கீர்த்தனமாக பாடும் போது அத்தனை பாவங்களும் மறைந்து ஓடுவதால், ஜீவன்கள் எளிதாக முக்தி அடைந்து விடுகின்றன.” என்று சிவ பெருமான் பார்வதி தேவியிடம் கூறுவதாக பிரம்ம யமலா என்ற சாஸ்திரம் குறிப்பிடுகிறது.

இந்த சாஸ்திரத்தின் படி, சரியான மகா மந்திரம் என்ன?

**ஹரே கிருஷ்ண ஹரே கிருஷ்ண**

**கிருஷ்ண கிருஷ்ண ஹரே ஹரே**

**ஹரே ராம ஹரே ராம**

**ராம ராம ஹரே ஹரே**

## *4.2* சாஸ்திரம்*:* ஶ்ரீராதா தந்திரம்

ஶ்ரீராதா தந்திரம் என்ற இந்த சாஸ்திரத்தில் ஒரு பக்தர் துர்கா தேவியிடம் சரியான மகா மந்திரம் என்னவென்று கேட்கிறார்.

ஸ்ருணு மாதர் மகா மாயே
விஸ்வ பீஜ சொரூபிணி
ஹரி நாம்னோ மகா மாயே
க்ரமம் வத சுரேஷ்வரி

"இந்த ஜட உலகங்களுக்கெல்லாம் மூல வித்தாகிய துர்கா தேவி! அனைத்து தேவர்களும் வணங்கும் தேவி! ஓ மகா மாயையே! இவ்வுலகங்கள் அனைத்துக்கும் தாயே! எனக்கு சரியான மகா மந்திரத்தை உபதேசிக்க வேண்டும்.."

பக்தரின் இந்த கேள்விக்கு, துர்கா தேவி கீழ்க்காணும் பதிலை அளிக்கிறாள்:

**ஹரே கிருஷ்ண ஹரே கிருஷ்ண**
**கிருஷ்ண கிருஷ்ண ஹரே ஹரே**
**ஹரே ராம ஹரே ராம**
**ராம ராம ஹரே ஹரே**

இந்த சாஸ்திரத்தின் படியும், சரியான மகா மந்திரம் என்னவென்று கண்டோம்.

## *4.3* சாஸ்திரம்*:* பிரம்மாண்ட புராணம்

இந்த சாஸ்திரத்தில், ஶ்ரீரோமஹர்ஷண சூத கோஸ்வாமி ஶ்ரீவியாச தேவரிடம் மகா மந்திரத்தின் வரிசையைக் கேட்கிறார். அதற்கு வியாச தேவர் பதிலளிக்கிறார்:

க்ரஹணாத் யஸ்ய மந்த்ரஸ்ய
தேஹீ ப்ரஹ்ம மயோ பவேத்
சத்ய: பூத: சுரோபோ அபி
சர்வ சித்தி யுதோ பவேத்
தத் அஹம் தே அபிதாஸ்யாமி
மகா பாகவதோ ஹ்யஸி

“ஓ மைந்தனே! நான் நிச்சயமாக உனக்கு மகா மந்திரத்தை உபதேசிக்கிறேன். இந்த மந்திரத்தை ஜெபிக்கும் போது ஒருவன் உடல் சம்பந்தமான நினைவுகளிலிருந்து விடுபட்டு ஆன்மீகத் தன்மையை அடைகிறான். ஒரு குடிகாரன் கூட, இந்த மகா மந்திரத்தை ஜெபித்து அனைத்து பாக்கியங்களையும் அடைவான். நீ ஒரு மகா பாகவதனும் தகுதியான சிஷ்யனும் ஆனதால், உனக்கு மகா மந்திரத்தை உபதேசிக்கிறேன்..

**ஹரே கிருஷ்ண ஹரே கிருஷ்ண**
**கிருஷ்ண கிருஷ்ண ஹரே  ஹரே**
**ஹரே ராம ஹரே ராம**
**ராம ராம ஹரே ஹரே**

இந்த சாஸ்திரத்தின் படியும், சரியான மகா மந்திரம் என்னவென்று கண்டோம்.

## *4.4* சாஸ்திரம்*:* ஆனந்த சம்கிதை

சோடஸை தானி நாமானி
த்வ த்ரிம்ஸத் வர்ணகானி ஹி
கலௌ யுகே மகா மந்த்ரஹ்
சம்மதோ ஜீவ தாரணே

உத்ஸ்ர்ஜ்யதன் மஹா மந்த்ரம்
யே த்வன்யத் கல்பிதம் பதம்
மகா நாமேதி காயந்தி
தே ஸாஸ்த்ர குரு லங்கினஹ்

ஹரே கிருஷ்ண ஹரே கிருஷ்ண
கிருஷ்ண கிருஷ்ண ஹரே ஹரே
ஹரே ராம ஹரே ராம
ராம ராம ஹரே ஹரே

“பதினாறு கிருஷ்ண நாமங்களை முப்பத்தி இரண்டு வார்த்தைகளில் கொண்ட ஹரே கிருஷ்ண மந்திரம் மட்டுமே மகா மந்திரம். இதற்கு மேலான மந்திரம் எதுவுமே

கிடையாது. கலியுகத்தில் இந்த மகா மந்திரம் மட்டுமே ஒரு ஜீவனுக்கு முக்தி அளிக்கும்.

அனைத்து சாஸ்திரங்களும் இந்த ஹரே கிருஷ்ண மகா மந்திரம் மட்டுமே சிறந்தது என்று கூறுகின்றன. எனவே இந்த மந்திரத்தை ஒருவன் தவிர்த்து, அல்லது திருத்தியோ, அல்லது வேறு எந்த மந்திரத்தையும் மகா மந்திரம் என்று எண்ணி அவற்றை பரப்பினாலோ, மகா மந்திரம் வெறும் கற்பனை என்று நினைத்தாலோ, அவன் குரு மற்றும் சாஸ்திரங்களுக்கு துரோகியாகி அபராதத்தையே சம்பாதிக்கிறான். மேலும் அவர்களுக்கு உண்மையான பலன் கிடைக்காது.

சரியான மகா மந்திரத்தைக் கேள்:

**ஹரே கிருஷ்ண ஹரே கிருஷ்ண**
**கிருஷ்ண கிருஷ்ண ஹரே ஹரே**
**ஹரே ராம ஹரே ராம**
**ராம ராம ஹரே ஹரே**"

இந்த சாஸ்திரத்தின் படியும், சரியான மகா மந்திரம் என்னவென்று கண்டோம்

## *4.5* சாஸ்திரம்*:* சனத் குமார சம்கிதம்

சனத் குமார சம்கிதம் என்ற சாஸ்திரத்திலும், மகா மந்திரத்தின் வரிசையை நாம் காண்கிறோம்.

ஹரே கிருஷ்ணௌ த்விர் ஆவ்ருதௌ
கிருஷ்ண தாத்ருக் ததா ஹரே
ஹரே ராம ததா ராம
ததா தாத்ருக் ஹரே புனஹ்

"முதலில் 'ஹரே கிருஷ்ண' என்ற வார்த்தையை இரண்டு தடவை ஜெபிக்க வேண்டும். அதன் பின், 'கிருஷ்ண' என்று இரண்டு தடவை ஜெபிக்க வேண்டும். அதன் பின்னர் 'ஹரே' என்று இரண்டு தடவை ஜெபிக்க வேண்டும். அதன் பின்னர், 'ஹரே ராம' என்ற வார்த்தையை இரண்டு தடவை ஜெபிக்க வேண்டும். அதன் பின் 'ராம' என்ற வார்த்தையை இரண்டு தடவை ஜெபிக்க வேண்டும். அதன் பின்னர் 'ஹரே' என்று இரண்டு தடவை ஜெபிக்க வேண்டும். "

இந்த சுலோகத்தின் படி நமக்கு மகா மந்திரத்தின் உண்மையான வடிவம் கிடைக்கிறது..

**ஹரே கிருஷ்ண ஹரே கிருஷ்ண**
**கிருஷ்ண கிருஷ்ண ஹரே ஹரே**
**ஹரே ராம ஹரே ராம**
**ராம ராம ஹரே ஹரே**

இந்த சாஸ்திரத்தின் படியும், சரியான மகா மந்திரம் என்னவென்று கண்டோம்.

## *4.6* சாஸ்திரம்*:* கலி சந்தரண உபனிஷத்

யஜுர் வேதத்தின் ஒரு அங்கமே கலி சந்தரண உபனிஷத். இந்த சாஸ்திரத்தை கலப்படம் செய்ததால் தான் இந்த பெரிய குழப்பத்துக்கு காரணம். இதன் மூல பிரதியில் கீழ்க்கண்ட சுலோகத்தில், மகா மந்திரத்தின் கருவையும் அதன் மகிமைகளையும் காண்கிறோம்.

இதில் ஸ்ரீநாரத முனிவர் தன் தந்தையான ஸ்ரீபிரம்ம தேவரிடம் அனைத்து உலகங்களிலும் மிகச்சிறந்த மந்திரம் என்னவென்றும் ஏன் அதை ஜெபிக்க வேண்டும் என்ற உண்மைகளைக் கூறுமாறு கேட்கிறார். அதற்குப் பதிலாக, பிரம்ம தேவர் மகா மந்திரத்தைப் பற்றி கூறுகிறார்.

ச ஹோவாச ஹிரண்ய கர்பஹ்,
ஹரே கிருஷ்ண ஹரே கிருஷ்ண
கிருஷ்ண கிருஷ்ண ஹரே ஹரே
ஹரே ராம ஹரே ராம
ராம ராம ஹரே ஹரே

இதி சோடசகம் நாம்னாம்
கலி கல்மஷ நாஸனம்
நாத: பரதத்ருஷரோபாய: ஸர்வ வேதேஷு த்ருஷ்யதே

“ஓ மைந்தனே! இந்த மகா மந்திரத்தை ஒருவர் ஜெபிக்கும் போது, கலி புருஷன் பீதியடைந்து உடனடியாக அந்த இடத்தை விட்டு ஓடி விடுவான். இந்த மகா மந்திரத்தை எப்படி ஒருவர் ஜெபிக்க வேண்டும்?

**ஹரே கிருஷ்ண ஹரே கிருஷ்ண**
**கிருஷ்ண கிருஷ்ண ஹரே ஹரே**
**ஹரே ராம ஹரே ராம**
**ராம ராம ஹரே ஹரே**

இந்த சாஸ்திரத்தின் படியும், சரியான மகா மந்திரம் என்னவென்று கண்டோம்.

எல்லா வேத இலக்கியங்களையும் மிகவும் ஆழமாக ஆராய்ந்து பார்த்தாலும், இந்த கலியுகத்திற்கு மிகவும் உகந்ததும், உயர்ந்ததுமான ஹரே கிருஷ்ண மஹாமந்திரத்தைத் தவிர வேறு எதையும் நாம் கண்டிப்பாகக் காணவே முடியாது.

# 5. மகா மந்திரம் ஆனந்தம் அளிக்கும்

சுயம் பகவானான ஶ்ரீகிருஷ்ணரின் நாமங்கள் அடங்கிய மகா மந்திரத்தை எவனொருவன் ஜெபிக்கிறானோ, அவனுக்கு அளவில்லாத ஆனந்தம் உண்டாகும். அனைத்து பாவங்களையும் அழித்து பிரேம பக்தியை அளிக்கும்.

இதைப்பற்றி அதர்வண வேதத்தில் வரும்' பிப்பலாத சக்கா' என்ற பகுதியில் கீழ்க்காணும் சுலோகம் வருகிறது.

ஸ்வ நாம மூல மந்த்ரேண

சர்வம் ஹ்லாதயதி விபுஹு

ஸ ஏவ மூல மந்த்ரம் ஜெபதி


ஹரிர் இதி கிருஷ்ண இதி ராம இதி

“ஶ்ரீகிருஷ்ணரின் நாமங்களைக் கொண்ட மகாமந்திரத்திலிருந்து தான் அத்தனை அவதாரங்களும் வருகின்றன. இந்த மகா மந்திரத்தை ஜெபிக்கும் எவரையும் அது ஆனந்தமடைய வைக்கும்.

# 6. முடிவான உண்மை

இதுவரை மேலே கொடுக்கப்பட்டுள்ள விளக்கங்களின் படி, இப்போது சரியான மகா மந்திரம் என்னவென்று பார்த்தீர்கள். ஆனால் இந்தக் கலியுகத்தில் சாஸ்திரங்களும் மந்திரங்களும் கலப்படத்தால் அழிகின்றன. பெரிய பெரிய கோயில்களிலும் கூட மகா மந்திரத்தை மாற்றிப் பாடுகிறார்கள்! அவர்களைக் கேட்க எவரும் இல்லை!

இதை முன்கூட்டியே அறிந்து தான் மகா மந்திரத்தை கீழ்க்கண்ட பாடலின் உள்ளே மறைத்து வைத்துள்ளார்களோ என்று நினைக்கத் தோன்றுகிறது.



This illustration reveals the *hare kṛṣṇa mahā-mantra* concealed

இந்த மகா மந்திரத்திலிருந்து தான் மற்ற அனைத்து மந்திரங்களும் தோன்றின. எனவே மகா மந்திரமே அனைத்து மந்திரங்களின் மூலம். மேலும், ஸ்ரீகிருஷ்ணரே தன் புனிதமான இனிய நாமங்களின் இனிமையை ரசிப்பதற்காக ஸ்ரீசைதன்ய மகாபிரபுவாக அவதரித்து, மகா மந்திரத்தை

பாடியும் ஆடியும் ரசித்தார்..”

எனவே நாமும் இந்த தெவிட்டாத அமிர்தமான மகாமந்திரத்தை, சரியான உருவத்தில் ஜெபித்து ஆனந்தம் அடைய வேண்டாமோ? ஏன் நாம் எவரோ தன் கற்பனையில் உண்டு பண்ணிய தப்பான மகா மந்திரத்தை ஜெபிக்க வேண்டும்?

மேலும், இந்த மகா மந்திரத்தை தகுந்த சம்பிரதாயத்தில் வரும் குருவிடமிருந்து கேட்டு ஜெபித்தால் மட்டுமே அதன் உண்மையான முழுப் பயனும் கிடைக்கும்!

நம் கோகுல் பவன் ஸ்ரீராதா மதன் மோகன் ஆலயத்தில் ஒவ்வொரு ஞாயிறு தோறும் ஸ்ரீமத் பகவத் கீதை, மற்றும் ஸ்ரீமத் பாகவதம், ஸ்ரீபிரம்ம சம்கிதம், ஸ்ரீபிருகத் பாகவதாம்ருதம், ஜீவ தர்மம், ஸ்ரீசைதன்ய சரிதாம்ருதம் போன்ற மிக உயர்ந்த சாஸ்திரங்களிலிருந்து ஹரி கதைகள் மற்றும் வகுப்புகள் நடை பெறுகின்றன.

மேலும் ஹரி நாம ஜெபம், ஸ்ரீராதா கிருஷ்ண பஜனைகள், ஸ்ரீஹரி நாம சங்கீர்த்தனம் போன்றவையும் நடைபெறுகின்றன. பக்தர்கள் அனைவரும் பங்கு பெற்று பயனடையுங்கள்.

சரியான மந்திரத்தை ஜெபியுங்கள்!
முழுப் பலனையும் பெறுங்கள்!

ஹரே கிருஷ்ணா!
நன்றி, வணக்கம்.



Dr. Bhagavati Kanta Dasa Ph.D, is an initiated disciple of Yuga Acharya Nitya Lila Pravishta Om Vishnu Pathaya Ashtothara Sata Sri Srimad Bhakti Vedanta Narayana Goswami Maharaja under Brahma Madhva Gaudiya Sampradaya spreading pure bhakti in the line of Lord Sri Caitanya Mahaprabhu and six goswamis.

ஶ்ரீ கிருஷ்ண சைதன்ய பிரபு நித்தியானந்த
ஶ்ரீ அத்வைத கதாதார ஶ்ரீ வாசாதி
கௌர பக்த விருந்த



ஹரேர் நாம ஹரேர் நாம ஹரேர் நாமைவ கேவலம்
கலௌ நாஸ்தி கலௌ நாஸ்தி
நாஸ்தி ஏவ கதிர் அன்யதா ... (பிருஹன் நாரதீய புராணம்)

கலியுகத்தில் ஹரி நாம சங்கீர்த்தனத்தைத் தவிர
வேறு எந்த விதமான வழிபாடும் பலனளிக்காது,
வேறு எந்த விதமான வழிபாடும் பலனளிக்காது,
வேறு எந்த விதமான வழிபாடும் பலனளிக்காது'

ஹரே கிருஷ்ண ஹரே கிருஷ்ண
கிருஷ்ண கிருஷ்ண ஹரே ஹரே
ஹரே ராம ஹரே ராம
ராம ராம ஹரே ஹரே